**தெரனியகல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2019 மார்ச் 22 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 25 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் தெரனியகல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **கணக்கீட்டு குறைபாடுகள்** | | |
| | மீளாய்வாண்டு நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 75,000 பெறுமதியான லஸ்ஸேகம காணி மற்றும் சனசமூக மண்டப கட்டிட நிர்மான செலவினம் ரூபா 1,410,969 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை உரிய முறையில் கணக்கீடு செய்ய வேண்டும். | சனசமூக மண்டப காணி மற்றும் கட்டிடத்தில் பெறுமதியை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கியுள்ளதுடன் 2019 ஆண்டிறுதி கணக்கு தயாரிக்கும் போது நிலையான சொத்துக்கள் கணக்கிற்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) **இணக்கஞ் செய்யப்படாத் கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் 07 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக் கூற்றுக்களில் மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகள் மீதிகளிற்கிடையில் ரூபா 5,374,962 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | குறித்த மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்ய வேண்டும். | வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன் |
| (ii) | நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் மொத்த சொத்துக்களில் கூட்டுத் தொகை ரூபா | குறித்த மீதிகளில் வித்தியாசத்தை | காணி மற்றும் கட்டிங்கள், வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள், இருப்பு கணக்கு |

| | | |
|---|---|---|
| 165,995,470 பெறுமதியான போதும், பண்டக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா 167,197,521 ஆனதால் ரூபா 1,202,051 தொகையான வித்தியாசம் ஆனது. | இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்ய வேண்டும். | (நீர்,மின்சார,வேலை) களில் வித்தியாசம் இல்லாததுடன் அலுவலக உபகரணங்கள், நூலக உபகரணங்கள் மற்றும் நூலக புத்தகங்களிற்கிடையில் ஏற்பட்ட வித்தியாசத்தை சரி செய்கிறேன். |

(இ) **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| **பெற வேண்டிய கணக்குகள்** | | |
| (i) 2014 ஆண்டின் பஸ் தரிப்பிடத்தில் 28 கடையறைகள் நிர்மாணத்திற்கு உடன்பட்டிருந்த வியாபாரிகளிறிடமிருந்து பெற வேண்டிய ஒரே தடவை சேர்க்கும் தொகையின் பெறுமதி ரூபா 26,398,000 ஆனது. | சபைக்கு பெற வேண்டிய பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| **செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| (ii) 2018 திசெம்பர் 31 திகதியிற்கு 01 ஆண்டை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 25,892,316 ஆனது. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018.12.31 திகதியிற்கு ரூபா 25,500,000 ஆன பஸ் தரிப்பிட கடையறைகள் நிர்மாணிக்கும் தொகையானதுடன் ரூபா 392,136 ஆன தொகை 05 கருத்திட்டங்களின் நிறுத்தி வைத்த தொகையாகும். அந் நிறுத்தி வைத்த பணத்தை விடிவிக்குமாறு மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சிற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளதுடன் பணம் கிடைத்ததன் பின் கொடுப்பனவு மேற்கொள்கிறேன். |

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ) பாராளுமன்ற சட்டங்கள்** | | | |
| (i) 1987 இலக்கம் 15 கொண்ட பிரதேச சபை சட்டம். | | | |
| 158(1)(அ) பிரிவு | 01 ஆண்டு காலத்தை விஞ்சிய ரூபா 454,922 ஆன நிலுவை வீத வரி மற்றும் ஏக்கர் வரி உரிமையாளரின் சொத்துக்களை தடை செய்தேனும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொடுப்பனவை புறக்கணிப்பவர்களின் சொத்துக்களை தடை செய்வதற்காக விநியோகிக்க வேண்டிய அறிவித்தலை குத்தகைகாரரிற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. 2019 மே 23, 24 திகதிகளில் சொத்துக்ளை தடை செய்யும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) 2000 இல் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இல் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கபட்ட 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக் க அதிவிஷேட வர்த்தமனி அறிவித்தல். | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 03 வியாபாரங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற்றிருக்காத நிலையில் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய அனைத்து வியாபார உரிமையாளர்கள் கடிதம் மூலம் அறிபூட்டப்பட்டுள்ளனர். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப் பிரமாணம் 571 | 2008 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை காலப்பகுதிக்குரிய காலம் கடந்த ரூபா 381,584 ஆன வைப்பு | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க | காலம் கடந்த வைப்புகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | |
|---|---|---|
| | தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 7,791,495 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 8,759,325 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமனம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 7,877,420 | 8,957,752 | **6,913**,454 | 2,044297 | 5,685,830 | 6,389,414 | 4,786,702 | 1,602,712 |
| (ii) | வாடகை | 4,709,850 | 5,998,306 | 5.983,777 | 14,530 | 4,722,200 | 4,772,278 | 4,676,778 | 95,500 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 647,100 | 753,092 | 753,092 | - | 607,600 | 750,080 | 750,080 | - |
| (iv) | ஏனைய வருமானம | 121,404,880 | 82,909,,449 | 37,043,770 | 45,865,679 | 106,762,030 | 75,355,738 | 31,484,538 | 43,871,200 |

#### 2.2.2 வீத வரி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1968 ஜுலை 01 திகதிய சீ/4 இலக்க உள்ளுராட்சி உதவி ஆணையாளரின் ‘‘முன்னேரிய பிரதேசம்’’ என பெயரிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் வீத வரி அறவிட முடியுமான முன்னேற்ற பிரதேசங்களை காலத்திற்கு காலம் இனங்காணுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளுராட்சி உதவி ஆணையாளரின் ஆலோசனை கடிதம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீத வரி அறவிடப்படும் பிரதேசங்களை விரிவாக்கும் முன் நடவடிக்கைகளிற்காக DR/PS/RE/01/01/11 இலக்க மற்றும் 2019 மே 02 திகதிய கடிதம் மூலம் தேவையான ஆவனங்கள் உள்ளுராட்சி உதவி ஆணையாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ஓராண்டு காலத்தை விஞ்சியிருந்த நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம், நீர் கட்டணம் மற்றும் வாகணங்கள் தரிப்பிடக் கட்டணம் முறையே ரூபா 73,600 , ரூபா 1,805 மற்றும் ரூபா 118,470 ஆனது. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். | 2014 ஆண்டின் வியாபார அனுமதிப்பத்திர பதிவேடு முறையாக பேணப்படாமையினால் சந்தை கட்டணங்களில் இந் நலுவை ஏற்பட்டுள்ளது. நிலுவை பணம் அறவிட முயற்சித்த போதும் பழைய வருடமொன்றின் நிலுவையாகையால் பெறும்பாலான வியாபாரிகள் கொடுப்பனவை மறுத்துள்ளனர். நிலுவை நீர் கட்டணம் ரூபா 1,805 இற்குரிய இடங்களில் ஆட்கள் இல்லாததனால் அறவிட முடியாதிருந்தது. வாகன தரிப்பிட கட்டண நிலுவையில் ரூபா 59,150 அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய நிலுவையையும் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.4 வியாபார அனுமதிப்பத்திரம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரத்திற்காக ஆய்வு நடாத்தப்பட்ட போதும், அத் தகவல்கள் உள்ளடக்கி வியாபார அனுமதிப்பத்திர பதிவேடு தயாரிக்கப்பட்டு நிலுவை வருமானத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரத்திற்காக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. |

### 2.2.5 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 6,377,479 தொகை மற்றும் | நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,660,146 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,966,084 யினை 2019 ஆண்டின் போது கிடைத்திருந்தது. மேலும் அறவிட வேண்டிய தொகையை அறவிடவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| முத்திரைக் கட்டணம் ரூபா 7,077,184 ஆனது. அவ்வாறே ஓராண்டு காலத்தை விஞ்சிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 3,377,479 மற்றும் ரூபா 2,007,184 ஆனது. | | எடுக்கிறேன். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **துணைச் சட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் உள்ளூராட்சி அமைச்சரினால் பிரசுரிக்கப்பட்டிருந்த 42 துணைச் சட்ட வரைவுகள் 2001 ஆண்டில் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் செயற்பட்டு வருமானம் சேகரிக்க மீளாய்வாண்டு இறுதியிலும் சபைக்கு இயலாமலிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டத்தின் படி செய்ற்பட்டு வருமானம் சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2001 ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் விளம்பர பலகை தொடர்பாக துணைச் சட்டம் ஒன்று இருப்பதுடன் அதை புதிய சபைக்கு சமர்ப்பித்து மீண்டும் புதுப்பிக்க அல்லது தற்போது வரைந்துள்ள துணைச் சட்டத்தை முன் கொண்டு செல்லயேனும் நடவடிக்கை எடுத்து அதன் படி முன் நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) **செயல் நடவடிக்கை திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டத்தினூடாக மேற்கொள்ள எதிர்பார்த்த கழிவு பொருள் முகாமைத்துவத்தின் கீழ் பசளை உற்பத்தி மற்றும் விற்பனை மேற்கொள்வதற்கு இயலாமலிருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ள எதிர்பார்த்த நோக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கழிவு பொருள் முகாமைத்துவ அலகு ஒன்று இல்லாமைனால் அதை செயற்படுத்த கடினமானது. எதிர்காலத்தில் அக் கருத்திட்த்தை நிருவ நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ) வேலைகள் மேற்கொள்வதன் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 தெயட்ட கிறுல அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டத்திற்கு சமாந்திரமாக நிர்மாணிக்கப்பட்ட தெரனியகல பஸ்தரிப்பிட அன்மித்த 50 கடையறைகளுடன் கூடிய வியாபார கட்டிடத் தொகுதியின் வேலைகள் பூர்த்ததி செய்யப்படவில்லை. | தொடர்புடைய நிர்மாணத்தின் வேலைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தெரனியகல பஸ்தரிப்பிட அன்மித்த கடையறைகள் 2014 தெயட்ட கிறுல நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் கேகாலை மாவட்ட செயலகம் மற்றும் பொறியியலாளர் கூட்டுத்தாபனம் ஊடாக நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்ட போதும் அந் நடவடிக்கை உரிய முறையில் இடம் பெற வில்லை. பஸ்தரிப்பிடம் அமைந்துள்ள காணி உரிமையாளர் தொடர்பாக பிரச்சியையொன்று இருப்பதனால் அந் நிலையை தீர்த்துக்கொள்ளும் வரை நிர்மாண வேலைகளை செய்வது பிரச்சினைக்குரியது. |

(ஈ) **கழிவுப் பொருள் முகாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் ஒன்று சேரும் கழிவு பொருடகளை வெளியிடுவதற்கு முறையான வேலை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான கழிவு பொருள் முகாமைத்துவ வேலை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | சபை அதிகார பிரதேசத்தில் ஒன்று சேரும் கழிவு பொருள் முகாமைத்துவ கருத்திட்டமொன்று செயற்படுத்தாமையினால் போதொட்ட இடுகாட்டில் 48 பர்சஸ் அளவான இடத்திற்கு வெளியிடப்படுகிறது. |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டில் நிலைபேறான | நிலைபேறான | நிலைபேறான அபிவிருத்தி |

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக சபை அறிந்திருக்கவில்லாததுடன் 2019 ஆண்டின் வேறான நிலைபேறான அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்பாக அனைத்து உத்தியோகத்தர்களையும் அறிவூட்டப்பட்டு எதிர்கால ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். அவ்வாறாயினும் வருடாந்த திட்டத்தை தயாரிக்கும் பிரமாணங்கள் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்கள் அடைவதற்கு முடியுமானளவில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 44 அங்கீகரிக்கப்பட்ட ஆளணி ஆனதுடன் ஏற்பவருக்கு தனிப்பட்ட முறையிலான 15 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. 08 பதவி வகைகளுக்குரிய நிரந்தர ஆளணியில் நிலவும் 13 வெற்றிடங்களை முறையாக நிரப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரபிகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சேவை தேவைபாடு மீது மகா சபை அங்கீகாரம் பிரகாரம் ஒப்பந்த, கூலி அடிப்படையில் மற்றும் அமைய அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். |

### 3.3 சொத்துக்கள் முகாமை

#### 3.3.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபரகமுவ மாகாண சபைக்கு சொந்தமான ரூபா 7,460,870 ஆன டேலருட்னான 04 டெக்டர்களையும் சபைக்கு சுவீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வாகனங்களை சபைக்கு சுவீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதுவரை சுவீகரித்திற்கொண்டிள்ளாத 09 வாகனங்களை சபையிற்கு சுவீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

#### 3.3.2 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டு முதல் ஓட்ட நிலையில் இல்லாத ரூபா 1,150,875 ஆன டெக்டர் மற்றும் ரூபா 250,000 | ஓட்ட நிலையில் நிலவாத வாகனங்களை | ஓட்ட நிலையில் இல்லாத ரூபா 1,150,875 பெறுமதியான டெக்டரின் பழுதுபார்ப்பு |

| | | |
|---|---|---|
| ஆன கை டெக்டர் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது பொருத்தமான செயற்பாடொன்று எடுக்கப்படாமல் நிலவின. | பழுதுபார்த்து பயன்படுத்த அல்லது பராதீனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடவடிக்கை தற்போது நடைபெறுகிறது. கை டெக்டரை ஏலவிற்பனைக்காக சமர்ப்பிக்கப்பட்ட போதும், ஏலத்தில் விற்கப்படவில்லை. |

**3.4 ஒப்பந்த நிருவாகம்**

--------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 68 மீட்டர் நீளம் மற்றும் 2.45 மீட்டர் அகலம் ஹாரதாக கலபஹல பாதையை அபிவிருத்தி செய்யும் பண்ட மதிப்பீட்டை விட கல் ஒரு கியுப் அளவு மற்றும் 31 சிமேந்து மூடைகள் பாவிக்கப்பட்டுள்ளதால் குறித்த பாதை எதிர்பார்த்த நியமத்தில் உளளனவா என்பது பிரச்சினைக்குரிதானது. அவ்வாறே மாகாண சபை , பிரதேச சபை ஒதுக்கீட்டீன் கீழ் செய்யப்படும் எந்த வேலைகளையும் ஹெமர் இயந்திர பரிசோதனையினால் ஏனும் அதன் நியமத்தை பரிசோதித்திருக்கவில்லை. | ஒப்பந்த வேலைகளை உரிய நியமித்தில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்புடைய பாதைக்கி பயன்படுத்தியுள்ள பண்டங்களின் படி பட்டியள்களிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பாதைகளின் நியமத்தை உரிய முறையில் பேணுவதற்கு Core Cutter இயந்திரமொன்றை கொள்வனவு செய்ய விலை மனு கொரப்பட்டுள்ளது. |
| (ஆ) | லக்சேகம சனசமூக மண்டப கட்டிடத்தின் கொன்கிரீட் தட்டிற்காக 06 அங்குல இடைவெளியில் கம்பிகள் இட வேண்டிய போதும் 07 தொடக்கம் 10 அங்குல இடைவெளியில் கம்பிகள் இடப்பட்டுள்ளன . மதிப்பீட்டுடனான 40 நீல அடி பீம் ஒன்று கட்டிடத்திற்கு இடப்படவில்லை. | உரிய நியமத்தில் ஒப்பந்த செயல்களை மதிப்பீட்டின் படி பூர்த்தி செய்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வேலையின் கம்பிகள் இடப்பட்டுள்ள முறை நியமம் மற்றும் பாவனைகாலம் தொடர்பில் பிரச்சினை எழுவதில்லை. மேலும் அங்கு மேற்பார்வையில் ஏதேனும் தவறுகள் நடந்திருந்தால் அவ்வாறு நடப்பது ஆண்டிறுதி சில நாட்களில் பாரிய வேலை அளவுகள் மேறகொள்ள இருப்பதனால் என்பதுடன் அப் பிரச்சினையை குறைத்துக்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளுராட்சி ஆணையாளரின் ஆலோசனை பிரகாரம் 2019 ஆண்டு முதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழு நிருவப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கபட உள்ளது. |

### 4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 01 ஏக்கர் 3 ரூட் 30 பர்சஸ் ஆன 03 காணி பங்குகளின் பெறுமதியை மதிப்பீட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான ஆதனங்களை பெறுமதி மதிபீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக வேண்டும். | நிறுவனத்தில் உள்ள நீர் ஓடைக்கு கழுவப்பட்டு சென்றுள்ள இலுக்தென்ன அம்பளமகாவ வத்த எனும் 1.05 பர்சஸ் காணி தொடர்பாக உறுதிபடுத்தலொன்றை பெற்று பதிவேடுகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | கழிவு பொருள் முகாமைத்துவ கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக லலான் பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 2 ஹெக்டயார் 35.37 பர்சஸ் ஆன காணி பங்கை கொள்வனவு செய்வதற்காக 2018 ஜூலை 25 ஆம் திகதி ரூபா 155,000 ஆன முற்பணமொன்று தெரனியகல பிரதேச செயலாளருக்கு செலுத்திருந்த போதும், இன்னும் சுவீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான காணியொன்றை பெற்றுக் கொண்டு கருத்திட்டத்தை செயற் படுத்த வேண்டும். | கழிவு பொருள் முகாமைத்துவ அலகு ஒன்று நிருவப்படுவதற்கு லலான் பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தினால் உப குத்ததகை பெற்றிருந்த உடபாகே தோட்டத்தின் காணி பங்கை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்த போதும் சுவீகரிக்கும் நடவடிக்கை இன்னும் மேற்கொள்ளாததுடன் இவ் அலகை நிருவப்படுவது பொது மக்களின் எதுர்ப்பினால் தற்காலிகமா இடைநிறுத்தப்பட்டுள்ளது. |